# விவேகானந்த கல்லூரி

04543-258234, 258334
நிகரி : 04543-258358

(பல்கலைக்கழக மானியக் குழுவால் ஆற்றல்சார் கல்லூரி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது)
மதுரை காமராசர் பல்கலைக் கழகத்துடன் இணைந்த தன்னாட்சி பெற்ற குருகுல வாழ்க்கைப் பயிற்சி நிறுவனம்
தேசிய தர நிர்ணயக் குழுவினரால் (NAAC) ‘A’ கிரேடு மறு மதிப்பீடு செய்யப் பெற்றது (CGPA 3.59 out of 4.00)
(மேலாண்மை: ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, திருச்சி மாவட்டம்)
திருவேடகம் மேற்கு – 625 234, மதுரை மாவட்டம், தமிழ்நாடு
இணையதளம்: www.vivekanandacollege.org மின்னஞ்சல்: principal@vivekanandacollege.org





**சுவாமி நியமானந்த**
**செயலர்**

முனைவர் **சி.இராஜா**
**முதல்வர்**


# குருகுலச் சுடர்


கல்வியாண்டு 2017-18

சுடர் : 5

அக்டோபர் 2017


**அன்புடையீர்,**

வணக்கம். குருகுலம் இனிதே நடைபெற்று வருகின்றது. கடந்த அக்டோபர் 2017ல் நடந்த நிகழ்ச்சிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

**குருகுலம் சம்பந்தமானது**

02.10.2017, 09.10.2017, 23.10.2017, 30.10.2017 ஆகிய திங்கட்கிழமைகளில் காலை 8.10 மணிக்கு கல்லூரியில் தேசியக் கொடியேற்றம் நடைபெற்றது.

07.10.2017, 21.10.2017, 28.10.2017 ஆகிய சனிக்கிழமைகளில் மாலை 6.00 மணி முதல் 6.45 மணி வரை கல்லூரியின் பிரார்த்தனைக்கூடத்தில் பஜனை சிறப்பாக நடைபெற்றது.

23.10.2017 முதல் 26.10.2017 வரை அனைத்து இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கும் முதல் பருவத்தின் மூன்றாம் அகமதிப்பீட்டுத் தேர்வுகள் நடைபெற்றன.

11.10.2017, 12.10.2017, 13.10.2017 ஆகிய நாட்களில் இளங்கலை மற்றும் முதுகலை அறிவியல் பிரிவு மாணவர்களுக்கும், வணிகவியல் கணினிப்பயன்பாட்டுத் துறை மாணவர்களுக்கும் இக்கல்வியாண்டின் முதல் பருவத்திற்கான செய்முறைத் தேர்வுகள் நடைபெற்றன.

14.10.2017 முதல் 19.10.2017 வரையிலான தீபாவளி விடுமுறைக்குப் பிறகு 20.10.2017 அன்று கல்லூரி திறக்கப்பட்டது.

05.10.2017 மற்றும் 06.10.2017 ஆகிய இரண்டு நாட்கள் கல்லூரியின் அனைத்து துறைகளின் சார்பாக அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. 2017ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் உலக சுற்றுலா மேம்பாட்டு ஆண்டாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாண்டின் அறிவியல் கண்காட்சி சுற்றுலா மேம்பாடு தொடர்பானதாக அமைக்கப்பட்டது. 05.10.2017 அன்று காலை 8.30 மணிக்குக் கல்லூரியின் பிரார்த்தனைக் கூடத்தில் நடைபெற்ற கண்காட்சியின் துவக்கவிழாவில் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் நீதிபதி நீதியரசர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு துவக்கவுரை நிகழ்த்தினார். கல்லூரி செயலர் ஆசியுரையும், முதன்மையர் மற்றும் தேர்வுக்கட்டுப்பாட்டாளர் தலைமையுரையும் வழங்கினர். இவ்விழாவில் அனைத்து பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். அனைத்து துறைகளிலும் காட்சிப்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன், 13 பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவியரும் தங்கள் திறமைகளைக் காட்சிப்படுத்தினர். சிறந்த காட்சிப்படுத்திய மாணர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் அவர்களது பள்ளிகளுக்கு நினைவுப் பரிசும் வழங்கப்பட்டன.

23.10.2017 அன்று காலை 10.00 மணிமுதல் 12.00 மணி வரை கல்லூரி அக தர உத்தரவாத மையத்தினால் கல்லூரி ஒலி-ஒளி அரங்கில் நடைத்தப்பட்ட ஆசிரியர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் மதுரை KLN தகவல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் முனைவர் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு “Anthragogy” என்ற தலைப்பில் முதியோருக்கான கற்றல் மற்றும் கற்பித்தல் குறித்து சிறப்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி செயலர், முதல்வர் மற்றும் அனைத்து பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.

**வரலாற்றுத்துறை**

10.10.2017 அன்று சென்னை, சென்னைப் பல்கலைக்கழகத்தின் தேர்வுக் கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தில் நடைபெற்ற பல்கலைக்கழக பருவத் தேர்வுகள் தொடர்பான கூட்டத்தில் பேராசிரியர்கள் முனைவர் N.நாகேந்திரன், முனைவர் T.காளியப்பன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**வணிகவியல் துறை**

11.10.2017 அன்று மதுரை, யாதவா கல்லூரியின் தேர்வுக் கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தில் நடைபெற்ற அக்கல்லூரியின் பருவத் தேர்வுகள் தொடர்பான கூட்டத்தில் இணைப்பேராசிரியர் முனைவர் K.கார்த்திகேயன் மற்றும் உதவிப்பேராசிரியர் முனைவர் S.சந்திரசேகரன் கலந்துகொண்டனர்.

13.10.2017 அன்று மதுரை, அமெரிக்கன் கல்லூரியின் வணிகவியல் துறையில் நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையிலான போட்டிகளில் மாணவர்கள் 7பேர் முனைவர் பட்ட ஆய்வு மாணவர் திரு.M.தினேஷ்குமார் மேற்பார்வையில் சென்று கலந்துகொண்டனர்.

**இயற்பியல் துறை**

07.10.2017 அன்று மதுரை, மன்னர் திருமலை கல்லூரியின் இயற்பியல் துறையில் நடைபெற்ற “Developments in Advanced Materials and Their Appplications” என்ற தலைப்பிலான ஒருநாள் தேசியக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் திரு.S.கணேசன் பங்கு கொண்டு ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார். மேலும் இளங்கலை மாணவர்கள் 5பேர் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

**தாவரவியல் துறை**

09.10.2017 மற்றும் 10.10.2017 ஆகிய இரண்டு நாட்கள் கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம், நேசமணி நினைவு கிறித்துவக் கல்லூரியின் விலங்கியல் துறையில் பல்கலைக்கழக மானியக்குழுவின் நிதிஉதவியுடன் நடைபெற்ற "Bioinformatics and Sequence Analysis for College Teachers" என்ற தலைப்பிலான பயிற்சிப் பட்டறையில் உதவிப்பேராசிரியர் முனைவர் V.ரமேஷ் கலந்துகொண்டார்.

10.10.2017 அன்று தாவரவியல் துறையின் கருத்தரங்கக் கூடத்தில் அத்துறையின் சார்பாக விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழக கல்வியியல்துறை இணைப்பேராசிரியரும், துறையின் முன்னாள் மாணவருமான முனைவர் M.வாசிமலைராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உயிரியல் துறை மாணவர்களுக்கான மேற்படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு குறித்து சிறப்புரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் துறைத்தலைவர், பேராசிரியர்கள் மற்றும் அனைத்து மாணவர்கள் கலந்துகொண்டனர்.

20.10.2017, 21.10.2017 மற்றும் 24.10.2017 ஆகிய நாட்களில் கல்லூரியின் அருகில் அமைந்துள்ள தச்சம்பத்து மற்றும் நெடுங்குளம் ஆகிய கிராமங்களுக்குச் சென்று கல்லூரி சார்பாக தாவரவியல்துறை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக கிராம மக்களுக்கு நிலவேம்பு கசாயம் தயாரித்து வழங்கினர்.

தாவரவியல் துறை சார்பாக பரவிவரும் பல்வேறு காய்ச்சலை தடுக்கும் நடவடிக்கையாகக் கல்லூரி மாணவர்கள் மற்றும் விவேகானந்த மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு இம்மாதத்தின் அனைத்து நாட்களிலும் நிலவேம்பு கசாயம் தயாரித்து வழங்கப்பட்டது.

**விலங்கியல் துறை**

14.10.2017 அன்று இராமநாதபுரம் மாவட்டம், புதுமடத்தில் அமைந்துள்ள மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் கடல் மற்றும் கடல்சார் உயிரின ஆய்வு மையத்தின் விரிவாக்க ஆய்வகத்தினால் நடத்தப்பெற்ற ஒருநாள் கருத்தரங்கம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் உதவிப்பேராசிரியர் முனைவர் T.ரமேஷ் மற்றும் அனைத்து முதுகலை விலங்கியல் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

07.10.2017 மற்றும் 08.10.2017 ஆகிய இரண்டு நாட்கள் மதுரை, தியாகராசர் கல்லூரியின் தேசிய வளர்ச்சி மையத்தினால் நடத்தப்பெற்ற உயிரி தகவல்தொழில் நுட்ப அடிப்படைக் கருவிகள் என்ற தலைப்பிலான பயிற்சி நிகழ்ச்சியில் இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் 5பேர் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

06.10.2017 அன்று மதுரை, பாத்திமா மகளிர் கல்லூரியின் உயிரிவேதியியல் மற்றும் உயிரிஇயற்பியல் ஆய்வகங்களில் நடைபெற்ற அத்துறை மாணவியருக்கான செய்முறைத் தேர்வில் இணைப்பேராசிரியர் திரு.V.பார்த்தசாரதி தேர்வராகக் கலந்துகொண்டு தேர்வினை நடத்தினார்.

**உடற்கல்வித்துறை**

03.10.2017 அன்று மதுரை S.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக 'B' மண்டல கல்லூரிகளுக்கிடையிலான கைப்பந்து போட்டியில் நமது கல்லூரி அணியினர் சிறப்புடன் விளையாடி இரண்டாம் இடம் பிடித்தனர். இதில் 5பேர் மண்டலங்களுக்கிடையிலான போட்டியில் 'B' மண்டலம் சார்பாக விளையாட தேர்வு பெற்றனர். உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் மாணவர்களை அழைத்துச் சென்றார்.

05.10.2017 அன்று மதுரை, S.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக 'B' மண்டல கல்லூரிகளுக்கிடையிலான கபாடி போட்டியில் நமது கல்லூரி அணியினர் சிறப்புடன் விளையாடி இரண்டாம் இடம் பிடித்தனர். இதில் 4பேர் மண்டலங்களுக்கிடையிலான போட்டியில் 'B' மண்டலம் சார்பாக விளையாட தேர்வு பெற்றனர். உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் மேற்பார்வையில் அணியினர் இப்போட்டியில் கலந்துகொண்டனர்.

05.10.2017 அன்று மதுரை, S.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் நடைபெற்ற பல்கலைக்கழக மண்டலங்களுக்கிடையிலான கைப்பந்து போட்டியில் B.மகேஸ்வரன் (III Zoo), G.உதயக்கண்ணன் (III B.Com), S.நிவாஸ் (III Che), S.ராகவன் (III B.Com), T.சதீஷ்குமார் (III B.Com), B.கோபிகிருஷ்ணன் (II Eng) ஆகிய 5பேர் 'B' மண்டல அணி சார்பாகக் கலந்துகொண்டு விளையாடினர். உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் மாணவர்களை அழைத்துச் சென்றார்.

10.10.2017 அன்று மதுரை, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் நடைபெற்ற தேசிய அளவிலான யோகாசனப் போட்டிகளில் நமது கல்லூரி அணியினர் பேராசிரியர் திரு.I.இருளப்பன் மேற்பார்வையில் சென்று கலந்துகொண்டனர். இதில் K.எழில்அரசன் (III B.Com), E.சிவசங்கர் (III CA), T.கனகராஜ் (II Zoo), S.கார்த்திகேயன் (I CA) ஆகியோர் முதல் பரிசும், V.கோகுல் (II CS), M.தீபக்குமார் (II Zoo), M.செல்வக்குமார் (II Mat), K.அழகுமலை (I Che), M.சரவணன் (I Phy), R.பிரவீண் (I Com) ஆகியோர் இரண்டாம் பரிசும், K.அஜீத்குமார் (III B.Com), V.முகேஷ் (III Zoo), S.பூமணிகண்டன் (III Zoo), J.M.கோபிகிருஷ்ணன் (II CS) ஆகியோர் மூன்றாம் பரிசும் பெற்றனர். சிறந்த யோகக்கலை பயிற்சியாளருக்கான விருது பேராசிரியர் திரு.I.இருளப்பன் அவர்களுக்கும், சிறந்த யோகா பயிற்றுவிக்கும் கல்லூரிக்கான விருது நமது கல்லூரிக்கும் வழங்கப்பட்டது. இவ்விருதுகளை ஆசிய யோகாசனக் கழகத்தின் செயலர் வழங்கினார்.

12.10.2017 மற்றும் 13.10.2017 ஆகிய இருநாட்கள் விருதுநகர், செந்திக்குமார நாடார் கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக குத்துச்சண்டை அணிக்கான வீரர்கள் தேர்வில் உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் தேர்வுக்குழு உறுப்பினராகக் கலந்து கொண்டார்.

23.10.2017 அன்று சிவகாசி, Standard Fireworks Rajarathinam மகளிர் கல்லூரியில் நடைபெற்ற யோகாசன செய்முறைத் தேர்வில் உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் புறத்தேர்வராகக் கலந்துகொண்டார்.

26.10.2017 அன்று சிவகாசி, அய்யநாடார் ஜானகியம்மாள் கல்லூரியில் நடைபெற்ற பல்கலைக்கழக மண்டலங்களுக்கிடையிலான கபாடிப் போட்டியில் D.ஜெயகிருஷ்ணன் (II CA), L.செண்பகசாரதி (II B.Com), M.தமிழ்வாணன் (II B.Com), L.ரெங்கராஜன் (II Eco) ஆகிய 4பேர் ‘B’ மண்டல அணி சார்பாகக் கலந்துகொண்டு விளையாடினர். இதில் ‘B’ மண்டல அணி வெற்றி பெற்றது.

**NSS/NCC/அப்பர் உழவாரப்பணிக் குழு**

06.10.2017 முதல் 31.10.2017 வரையிலான நாட்களில் திருச்சி, அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியில் நடைபெற்ற புதுதில்லி குடியரசுதின அணிவகுப்பில் கலந்துகொள்வதற்கான தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான தேர்வு முகாமில் P.அழகர்ராஜா (II Phy), A.பால அரவிந்த் (II B.Com) ஆகியோர் கலந்துகொண்டு அடுத்த நிலை முகாமிற்குத் தேர்வாகினர்.

28.10.2017 அன்று மேலக்கால் ஆரம்ப சுகாதார நிலையம் சார்பாக கல்லூரியின் அருகில் அமைந்துள்ள சோழவந்தான், தென்கரை, முள்ளிப்பள்ளம், தச்சம்பத்து, நெடுங்குளம், திருவேடகம் மற்றும் மேலக்கால் ஆகிய கிராமங்களில் நடைபெற்ற டெங்கு விழிப்புணர்வு ஊர்வலத்தில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் 250பேர் மற்றும் தேசிய மாணவர் படை மாணவர்கள் 50பேர், கல்லூரிப் பேராசிரியர்கள் 12பேருடன் சென்று கலந்துகொண்டனர்.

29.10.2017 அன்று மதுரை, ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்தநாள் நினைவு மாரத்தான் போட்டி நடைபெற்றது. இதில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் 50 பேர் கலந்துகொண்டனர்.

**கல்லூரி விடுமுறை மற்றும் திறக்கும் நாள்**

30.10.2017 அன்று ஆரம்பமாகி 11.11.2017 வரை அனைத்து இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கும் இக்கல்வியாண்டின் முதல் பருவத்தேர்வுகள் நடைபெறவுள்ளன. 09.11.2017 முதல், தேர்வு முடிவுறும் துறை மாணவர்கள் பருவத்தேர்வு விடுமுறைக்காகத் தத்தமது ஊர்களுக்குச் செல்கின்றனர்.

28.11.2017 முதல் 30.11.2017 வரையிலான மூன்று நாட்கள் முதலாமாண்டு மாணவர்களுக்கு ஆங்கிலமொழித்திறன் பயிற்சி முகாம் கல்லூரியில் நடைபெற உள்ளது. ஆகவே அவர்கள் 27.11.2017 அன்று இரவு 8.40 மணிக்கு வாழிவகுப்பிற்கு கல்லூரிக்கு வந்துவிடவேண்டும். அன்றைய இரவு உணவை மாணவர்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

பருவத்தேர்வு விடுமுறைக்குப் பிறகு 01.12.2017 அன்று கல்லூரி துவங்குகிறது. ஆகையால் இரண்டாமாண்டு, மூன்றாமாண்டு மற்றும் முதுகலை மாணவர்கள் அனைவரும் 30.11.2017 வியாழக்கிழமை இரவு 8.40 மணிக்கு வாழிவகுப்பிற்கு வந்துவிடவேண்டும். அன்று இரவு உணவை மாணவர்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

**மாணவர்கள் செய்யவேண்டியவை**

மாணவர்கள் வீட்டிற்குச் சென்றவுடனும், வீட்டிலிருந்து கல்லூரிக்குத் திரும்பும் போதும் தாய் தந்தையரை நமஸ்கரித்து ஆசிர்வாதம் பெற்று வரவேண்டும்.

மாணவர்கள் பருவத்தேர்வு விடுமுறையில் தங்கள் தினசரி நிகழ்வுகளை கட்டுரை ஏட்டில் ஒரு நாளைக்கு 250 வார்த்தைகள் ஆங்கிலத்தில் எழுதி பெற்றோர் கையொப்பம் பெற்று கல்லூரிக்கு வரும்பொழுது குருகுல அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

மாணவர்கள் கல்லூரியில் தாங்கள் கற்ற யோகாசனப் பயிற்சிகளை தாங்கள் பயின்ற அல்லது தங்களுக்கு ஊருக்கு அருகில் உள்ள ஒரு பள்ளிக்குச் சென்று அங்குள்ள மாணவ மாணவியருக்குக் கற்றுத் தந்து பள்ளித்தலைமையாசிரிடம் அதற்கென வழங்கப்பட்டுள்ள படிவத்தில் கையொப்பம் பெற்றுவந்து உடற்கல்வி இயக்குநரிடம் சமர்ப்பிக்கவேண்டும்.

**குருதிக்கொடை**

16.09.2017 அன்று மதுரை, ராஜாஜி அரசு மருத்துவமனையில் ‘$AB^{+}$’ வகை இரத்தம் கொண்ட மூன்றாமாண்டு வணிகவியல் மாணவர் P.கமல்பிரசாத் இரத்தம் தானம் செய்தார்.

**2017 அக்டோபர் மாதத்திற்கான கட்டண விவரம்**

உணவுக் கட்டணம் நாள் ஒன்றுக்கு - ரூ.85/-

அன்பும் நமஸ்காரமும்

இடம்: திருவேடகம் மேற்கு **முனைவர் சி.இராஜா**

நாள்: 01.11.2017 முதல்வர்